பொ.அறிவழகன், பாலகிருஷ்ணன்

# போலீஸ் மிதிச்சதுல ஒண்ணுக்கு போனா ரத்தம் வருது!

பொதுமக்களிடம் காவல் துறை கனிவுடன் நடந்துகொள்ள வேண்டும் என்ற உத்தரவு காற்றில் கரைந்த கற்பூரமாய் ஆகி, ஒரு சில காவல் நிலையங்களில் கொடூரமே கோலோச்சுகிறது. இதற்கு சான்றாகியுள்ளது தேவதானப்பட்டி காவல் நிலைய சம்பவம்.



ரிசாத் ராஜ்

போலீஸாரால் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் விவசாயி செல்வத்திடம் பேசினோம். "போன 3.4.2022 அன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சுமார் 4 மணிக்கு தேவதானப்பட்டி போலீஸ் ஸ்டேஷனை சேர்ந்த போலீஸ் சுப்பிரமணி, அமர்நாத் மற்றும் இன்ஸ்பெக்டர் ராஜசேகரன் ஆகியோர் வந்தனர். வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த என்னோட மகன் ரிசாத் ராஜை, ஒரு வழக்கு சம்பந்தமா விசாரிக்கணும்னு கூட்டிட்டுப் போனாங்க.

அதுக்குப் பிறகு 5.4.2022 அன்று வரை ஜெயமங்கலம் காவல் நிலையத்தில் கட்டி வைத்து, தலைகீழாக தொங்கவிட்டு இரும்பு ராடு கொண்டு முதுகிலும், தொடையிலும் அடித்து, துன்புறுத்தி பல வகைகளில் என் மகனை சித்திரவதை செய்து, 'ஒரு ... பயலான (பட்டியலின சாதி ஒன்றின் பெயரை குறிப்பிட்டு) உன் அப்பனுக்கு ஒரு இன்ஸ்பெக்டர் மேல கேஸ் போடுற அளவுக்கு அவ்வளவு திமிராடா..?' என்று கேட்டு தேவதானப்பட்டி இன்ஸ்பெக்டர் ராஜசேகரன் தன்னுடைய பூட்ஸ் காலால் எட்டி உதைத்து, 'எதிர்த்து பேசுகிறாயா..?' என்று கேட்டு, எனது மகனின் கை விரலில் அடித்து விரல் நகம் நிறம் மாறும் அளவிற்கு காயத்தை ஏற்படுத்தியிருக்கிறார். உயிர் தளத்தில் காயப்படும் அளவுக்கு அடிச்சி, மிதிச்சிருக்காங்க. ஒண்ணுக்கு கழிக்கும்போது ரத்தம் சேர்ந்து வர்ற அளவுக்கு பலவகைகளில் சித்திரவதை செய்துள்ளார்கள்.



செல்வம்

இது குறித்து வக்கீலிடம் முறையிட்டேன். இதனை அறிந்த போலீஸார், ஜெயமங்கலம் காவல் நிலையத்தில் எனது மகன் மீது வழக்குப் பதிவு செய்தார்கள். இதற்கிடையே, தேவதானப்பட்டி போலீஸ் பாண்டி என்பவர், என்னை அழைத்து, 'உடனடியாக உன்னை டி.எஸ்.பி. முத்துக்குமார் அழைக்கிறார், நீ வராவிட்டால் உன் மகனை உயிரோடு பார்க்க முடியாது' என்று என்னிடம் சொன்னார். உடனே, பதற்றத்தோடும் பயத்தோடும் ஜெயமங்கலம் காவல் நிலையத்துக்கு சென்றேன்.

அங்கிருந்த இன்ஸ்பெக்டர் ராஜசேகரன், 'உன் மகன் பற்றி வெளியில் ஏதும் சொன்னால் உன் மகனை அடித்தே கொன்றுவிடுவோம். உன் மீது இன்னும் பல பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து உன் வாழ்க்கையையும் தொலைத்து விடுவோம். நீ உடனடியாக இன்ஸ்பெக்டர் வெங்கடேஷ் பிரபு மீது மனித உரிமை ஆணையத்தில் போட்டு இருக்கிற வழக்கை வாபஸ் வாங்கிவிடு' என்று மிரட்டினார். பின்னர், பெரியகுளம் டி.எஸ்.பி. முத்துக்குமாரும் என்னை மிரட்டினார்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஏ.டி.எஸ்.பி. சக்திவேல், டி.எஸ்.பி.யை சத்தம் போட்டார். 'அவனோட மகன யாருக்கும் தெரியாம வச்சு அடிச்சது தவறு. அதன்பிறகு இவ்வளவு காயங்களோடு ரிமாண்ட் செய்ய தகுதிச்சான்று வாங்கியதும் தவறு, மூன்று நாட்களாக யாரை



# முரட்டு போலீஸின், பகீர் கஸ்டடி?



ராஜசேகரன்

கேட்டு சட்டத்திற்குப் புறம்பாக காவலில் வைத்திருந்தீர்கள், யாரை கேட்டு இரவோடு இரவாக அவ்வளவு அவசரமாக எதற்காக ரிமாண்ட் செய்தீர்கள்' என்றும் கேட்டு எனக்கு ஆறுதலாக பேசினார்" என்றார் கவலையும் கண்ணீருமாக.

செல்வத்தின் வக்கீல் பாண்டியராஜன் நம்மிடம், "செல்வத்தை 2017ல் தேவதானப்பட்டி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் வெங்கடேஷ் பிரபு கடுமையாகத் தாக்கியதாக, அவரது மனைவி மங்கையர்க்கரசி தமிழ்நாடு மனித உரிமை ஆணையத்தில் புகார் அளித்திருந்தார். அந்த விசாரணை இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளது. இந்தநிலையில், அவர்களது மகன் ரிசாத் ராஜ் மீது தொடர்ந்து பொய் வழக்கு போட்டு வந்ததோடு, தற்போது, ரிசாத் ராஜை போலீஸார் இல்லீகலாக கஸ்டடியில் வைத்து கொடூரமாகத் தாக்கியிருக்கிறார்கள். நாங்கள் இதை மனித உரிமை ஆணையத்திற்கு கொண்டு சென்று இருக்கிறோம். ஒரு நாள் மருத்துவ சிகிச்சை கொடுத்து மறுபடியும் ரிமாண்ட் செய்த போலீஸ், மற்றும் அதற்கு உதவிய மருத்துவர்கள் மீது வழக்கு தொடர்வோம்" என்றார்.

மனித உரிமை வழக்கறிஞர் ஹென்றி டிஃபேனிடம் பேசும்போது, "ரிசாத் ராஜின் உடலில் இரண்டு ராடு கொண்டு சூடு வைத்திருக்கிறார்கள். ஆனால் போலீஸாரின் அழுத்தத்தால், டாக்டர்கள் சாத்தான்குளம் சம்பவம் போல் மெடிக்கல் ஃபிட்னஸ் கொடுத்திருக்கிறார்கள். மனித உரிமை ஆணையத்தின் விசாரணை 8.4.22 அன்று வந்தபோது, நான் நேரில் பார்த்து நீதிபதி ஜெயச்சந்திரனிடம் முறையிட்டேன். அவர் நேரில் மதுரை சிறைச் சாலையில் ஒரு மணி நேரம் செல்வத்தின் மகனிடம் பேசி காயங்களைப் பார்த்து, அவரிடமே எழுத வைத்து புகார் பெற்றுள்ளார்.



டோங்ரே
பிரவீன் உமேஷ்

ஜி.ஹெச்.க்கு அனுப்ப பரிந்துரைத்திருக்கிறார். நாங்கள் தொடர்ந்து ஐ.ஜி.யிடம் இந்தத் தகவலைக் கொண்டு சென்றோம். இப்போது, இன்ஸ்பெக்டர் ராஜசேகரன் கன்ட்ரோல் ரூமுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்" என்றார்.

மதுரை மத்திய சிறையில் ரிசாத் ராஜிடம் விசாரணை மேற்கொண்ட மனித உரிமை ஆணைய நீதிபதி ஜெயச்சந்திரன் கூறுகையில், "விசாரணை கைதியிடம் வாக்குமூலம் பெற்றுள்ளோம். காயங்கள் இருக்கின்றன, மருத்துவர்கள் காயம் ஏற்பட்ட இடங்களை கண்டறிந்து, சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். முழு விசாரணைக்குப் பிறகுதான் கூறமுடியும்" என்றார்.

இன்ஸ்பெக்டர் ராஜசேகரனை தொடர்பு கொள்ள முயன்றும் தொடர்பு கொள்ள முடியவில்லை. இதுகுறித்து தேனி மாவட்ட எஸ்பி டோங்ரே பிரவீன் உமேஷிடம் பேசியபோது, "ரிசாத் ராஜை ஜெயமங்கலம் போலீஸ், ஒரு ராப்ரி கேஸில் அரெஸ்ட் செய்துள்ளது. அவரை ரிமாண்ட் செய்வதற்கு செல்லும்போது, ஜே.எம்.மிடம் உடலில் காயம் இருக்கு என்று கம்ப்ளெயின்ட் சொன்னார்கள். தேனி மெடிக்கல் காலேஜ் ஹாஸ்பிட்டலுக்கு ரெஃபர் செய்யச் சொல்லி உத்தரவு வந்தது. அங்கு ஒருநாள் முழுக்க ட்ரீட்மெண்ட் செய்து, முழு மெடிக்கல் செக்கப் செய்து, ஃபிட்னஸ் சர்டிஃபிக்கேட்டுடன் மீண்டும் ரிமாண்ட் செய்து மதுரை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டோம். அடித்தார்கள் என்பது குறித்து விசாரிக்க ஏ.டி.எஸ்.பி. தலைமையில் ஒரு குழுவை நியமித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.



பாண்டியராஜன்



ஹென்றி டிஃபேன்

விசாரணைக்கு வசதியாக இன்ஸ்பெக்டர் ராஜசேகரன் தலைமையிடத்தில் பணியில் இருக்கிறார். ரிசாத் ராஜ் மீது 12 வழக்குகள் உள்ளது. ஒரு முறை குண்டாஸ் போடப்பட்டுள்ளது. அவர் குற்றவாளியாக இருந்தாலும் சட்ட விரோதமாக தாக்கியிருக்கிறார்களா என்று விசாரணை அறிக்கை வந்தவுடன்தான் தெரியும்." என்றார்.

இன்னும் நூறு ஜெய்பீம்க்கு ரியல் கதைகள் கிடைக்கும் போல!